"இனிமையான குழந்தைகளே! பாபாவுக்கு உங்களது மனநிலை பற்றிய செய்தியைத் திறந்த மனதுடன் கொடுங்கள், திறந்த மற்றும் உண்மையான மனதில் தான் பாபாவின் நினைவு தங்கியிருக்க முடியும்.

கேள்வி: இச்சமயம் சிறியவர் பெரியவர் அனைவருக்கும் வானப்ரஸ்த நிலை இருந்த போதும் நீங்கள் எந்த ஒரு வார்த்தையை வாயினால் சொல்ல கூடாது?

பதில்: பாபா, இப்போது விரைவு படுத்துங்கள். இப்போது நாங்கள் வீட்டுக்குச் செல்ல வேண்டும், இங்கே மிகுந்த துக்கம் நிறைந்துள்ளது. பாபா சொல்கிறார்--குழந்தைகளாகிய நீங்கள் இதுபோல் ஒரு போதும் சொல்லக் கூடாது. ஏனென்றால் நீங்கள் இப்போது ஈஸ்வரன் முன்னிலையில் அமர்ந்துள்ளீர்கள். இப்போது உங்களுக்குக் குளிர்ந்த (அன்பான) மடி கிடைத்துள்ளது. இச்சமயம் நீங்கள் உயர்ந்தவரிலும் உயர்ந்தவராக ஆகியிருக்கிறீர்கள். சத்யுகத்தில் தகுதி (டிகிரி) குறைந்து விடும். அங்கே தெய்வீகக் குழந்தையாக ஆவீர்களேயொழிய, ஈஸ்வரிய குழந்தையாக அல்ல. அதனால் நீங்கள் விரைவு படுத்துமாறு சொல்லக் கூடாது.

பாடல்: உன்னை அழைக்க மனம் விரும்புகின்றது....

ஓம் சாந்தி. இனிமையிலும் இனிமையான, அழைக்கின்ற குழந்தைகள் இப்போது தெரிந்து கொண்டார்கள். பக்தர்கள் பகவானை அழைக்கின்றனர். இப்போதோ நீங்கள் பக்தர்கள் அல்ல. நீங்கள் குழந்தைகள். குழந்தைகளே நினைவும் செய்கின்றனர். எழுதவும் செய்கின்றனர், பாபா, நாங்கள் உங்கள் முன்னிலையில் நேரடியாகக் கேட்க விரும்புகின்றோம்.அழைப்புக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றனர்-- பாபா, உங்களிடம் முன்னிலையில் கேட்க விரும்பு கின்றோம். இப்போது பிரம்மா வாய் மூலமாக அன்றி நேரடியாகக் கேட்பது இயலாது. குழந்தை களுக்குத் தெரியும்: பாபா கல்பத்திற்கு முன் போலவே வந்திருக்கிறார். பிரம்மா வாய் வழி வம்சாவளி பிராமண குல பூஷணர் என்ற பெயர் எவ்வளவு நல்லதாகக் கொடுக்கப்பட்டுள்ளது! பிரம்மா குமார் குமாரிகளோ ஏராளமானவர்கள் உள்ளனர். அவர்களுக்கு ஞானம் கிடைத்துள்ளது. பரமபிதா பரமாத்மா ஞானக்கடலாக இருப்பவர், அவர் தான் சுகக்கடல் எனப்படுகிறார். இதுவும் பாடப்பட்டுள்ளது- துக்கத்தைப் போக்கி சுகமளிப்பவர். அவரோ சிவபாபாவே தான். பெயர்கள் விதவிதமாக எத்தனை கொடுக்கப்பட்டுள்ளன! மகிமைகளோ அநேகம் இல்லையா? பாடவும் செய்கிறார்கள்--ஹர-ஹர, அதாவது துக்கத்தைப் அகற்றுங்கள். பகவானை நோக்கித் தான் பாடுகின்றனர். ஆனால் பகவானைப் பற்றி அறியாத காரணத்தால் பிரம்மா, விஷ்ணு, சங்கருக்கு சொல்லிவிடு கின்றனர். தேவ-தேவ மகாதேவ. சிவனை மறந்து சங்கருக்குச் சொல்கின்றனர்- ஹர-ஹர மகாதேவ்! பிரம்மாவையும் விஷ்ணுவையும் மகாதேவ் என்று சொல்ல மாட்டார்கள். அவர்களோ ஸ்தூல பாகத்தில் வரக்கூடியவர்கள். சங்கர் சூட்சும வதனத்தில் தான் இருக்கிறார். துக்கத்தைப் போக்குகிறவர் பதீத பாவனரோ ஒரே ஒரு நிராகார் பகவான் ஆவார். சங்கரைப் பதீத பாவனர் எனக் கூற மாட்டார்கள். மகிமைகள் அனைத்தும் ஒருவருக்கே. விஷ்ணுவின் இரண்டு ரூபங்கள் லட்சுமி-நாராயணர் அல்லது இராதை-கிருஷ்ணர் - அவர்களுக்குத் தனித்தனிப்

பிறவிகள் உள்ளன. விஷ்ணு அவதாரம் கூடப் பாடப்பட்டுள்ளது. சதுர்புஜத்தைக் காட்டுகின்றனர். ஆனால் இது யாருக்கும் தெரியாது - முதலில் சொர்க்கத்தில் இளவரசர்-இளவரசியாக இருந்த இராதை-கிருஷ்ணர், பிறகு லட்சுமி - நாராயணராக ஆகின்றனர். இதை நீங்கள் அறிவீர்கள். இதையும் அறிவீர்கள்--மாயாவின் பெரிய புயல் சூட்சுமமாக வருகின்றது. மாயா மறக்கடித்து விடுகின்றது. அதிகமாகப் புயலைக் கொண்டு வருகின்றது. எந்த ஒரு விஷயத்தையும் திறந்த மனதோடு குழந்தைகள் கேட்டுக் கொண்டே இருந்தால் கேள்விக்குப் பதில் கிடைக்கும். புயலும் அநேகவிதமாக வருகின்றன. கனவுகள், தீய எண்ணங்கள் அநேக விதமாக வருகின்றன. சூறாவளிக் காற்று என்று புயலுக்குச் சொல்லப்படுகின்றது. இப்போது இந்த பிரம்மாவோ பெயர் பெற்றவர். எப்படி-எப்படி மனிதர்களின் தேசமோ அப்படியே வேஷமும் உள்ளது. இப்போது கூட பாருங்கள், சிலர் ஊமை-நொண்டியாக, சிலர் கூனியாக, சிலர் கண் இல்லாதவர்களாக இருப்பார்கள். அங்கோ இயற்கையான அழகு இருக்கும். ஏனென்றால் 5 தத்துவங்களும் கூட சதோபிரதான் நிலையில் இருக்கும். ஆக, இந்த ஞானத்தை முன்னிலை யில் கேட்பதற்காகக் குழந்தைகள் அழைக்கின்றனர். கீதையிலும் கூட ஏதேனும் சில விஷயங்கள் சரியாக உள்ளன. தேவதா தர்மம் மறைந்து விட்டது. ஆனாலும் கோயில்கள் நினைவுச் சின்னங்களாக உள்ளன இல்லையா? நினைவுச் சின்னங்கள் அனைத்து மதத்தினருக் கும் உள்ளன. இதைக் குழந்தைகளாகிய நீங்கள் தான் அறிவீர்கள்--உயர்ந்தவரிலும் உயர்ந்தவர் என்று ஒரு நிராகார் மட்டுமே சொல்லப்படுகின்றார். அவருக்கே மகிமை. மேலும் சங்கமயுகத் தில் தான் ஆத்மாக்களும் பரமாத்மாவும் சந்திக்கின்றனர். ஆத்மாக்கள் ஏராளமாக உள்ளனர் இல்லையா? வளர்ச்சி அடைந்து கொண்டே போகும். இப்போது குழந்தைகள் நீங்கள் நேரடியாகக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். மற்றவர்களுக்கும் முன்னிலையில் கேட்கவேண்டும் என்ற எண்ணம் மனதில் உள்ளது. இங்கே அவர்களால் வரமுடியவில்லை. காரணம் பந்தனத்தில் இருக்கிறார்கள். வேறு எந்த சத்சங்கத்திற்கும் செல்ல தடை சொல்வதில்லை. பம்பாயில் கீதை சொல்கிறார்கள் என்றால் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களும் போக முடியும். கட்டணம் இல்லை. எங்காவது சுலபமான பாதை கிடைத்து விடாதா என்று வெவ்வேறு குருமாரிடம் சென்று கொண்டே இருக்கின்றனர். முக்தி மற்றும் ஜீவன் முக்திக்கான வழி யாருக்குமே தெரியாது. அதனால் அதிகமாகத் தேடுகின்றனர். இங்கோ எந்த ஒரு குரு, சாமியார் போன்றோர் கிடையாது. பிரம்மாகுமார் மற்றும் பிரம்மாகுமாரிகள், அவ்வளவு தான். மகாத்மா யாரும் கிடையாது. எப்படி நீங்களோ அப்படியே இவரும் (பிரம்மா) இருக்கிறார். வேறுபாடு சிறிதும் இல்லை. வேஷம் முதலியவற்றில் வேறுபாடு இல்லை. இந்த சால்வை முதலியவற்றையும் கூடச் சில நேரம் எடுத்துக் கீழே வைத்து விடுகின்றேன். ஆனால் டிராமாவின் படி இது அதிகாரப் பூர்வ உடை ஆகிவிட்டது. உடையைப் பார்க்கக் கூடாது. புத்தி சிவபாபாவிடம் சென்று விடுகின்றது. மற்ற மனிதர்கள் அனைவரும் சரீரத்தைப் பார்ப்பார்கள். நீங்கள் உங்களுடைய சரீரத்தைக் கூட மறந்து விடுகிறீர்கள். மேலும் இந்த தாதாவின் சரீரத்தையும் மறக்கிறீர்கள். தேகி அபிமானி ஆகவேண்டும். இவருடைய சரீரத்தை நினைவு செய்யக் கூடாது. சிவபாபா இவர் மூலம் நமக்கு இராஜயோகம் கற்றுத் தருகின்றார். அவரே ஞானம் நிறைந்தவர், திரிகாலதரிசி. முதல்-இடை-கடை பற்றிய ஞானத்தை இச்சமயம் அமர்ந்து சொல்கின்றார்.

வயது முதிர்ந்த தாய்மார்கள் முதலியவர்களுக்கும் இது மிக சுலபமானது. அந்தப் பாடசாலை களிலோ வயதான மாதாக்கள் எதையும் புரிந்து கொள்ள முடியாது. இது அனைவருக்குமே எளிமையாகப் புரியக்கூடியது. என்னை நினைவு செய்யுங்கள் என்று மட்டுமே பாபா சொல்கின்றார். மனிதர்கள் சாகும் தருவாயில் இருக்கும் போது இராம்-இராம் சொல்லுங்கள், இதைச் சொல்லுங்கள் என்று மந்திரம் கொடுக்கின்றனர். பெரும்பாலும் வானப்ரஸ்தத்திற்குப் பிறகு தான் குருவின் மந்திரத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். ஆனால் இப்போதோ பாபா சொல்கிறார்--பழைய உலகம் முழுவதும் வினாசமாகப் போகின்றது. முதியவர், இளைஞர், சிறுவர்கள் -- அனை வருக்கும் வானப்ரஸ்த நிலை. இதுபோல் வேறு யாரும் சொல்ல இயலாது. சொல்வார்கள்--அனைவருக்கும் மரணத்தைக் கொடுக்க தயாராகி விட்டீர்களா என்ன? ஆம், மரணமோ அனைவருக்கும் வரத்தான் போகிறது. ஒரு சிலர் கேட்கிறார்கள்-- பாபா, இங்கே இன்னும் எதுவரை இருப்பது? நாங்கள் சீக்கிரம் செல்ல வேண்டும். இங்கே மிகுந்த துக்கமாக உள்ளது. இன்னும் போகப்போக கூட இதுபோல் சொல்வார்கள். பாபா சொல்கிறார்-- இதுபோல் ஏன் சொல்கிறீர்கள்? அட, இச்சமயமோ நீங்கள் ஈஸ்வரனின் முன்பாக அமர்ந்திருக்கிறீர்கள். பின்போ டிகிரி குறைந்து போகும். போய் தெய்வீகக் குழந்தை ஆவீர்கள். இப்போது இந்தக் குளிர்ந்த மடி நல்லது. ஆனால் இங்கோ வெப்பமும் கூடக் குளிர்ந்ததாக ஆக்கப் படுகிற தென்றால் அது நன்றாக உள்ளது. இப்போது விரைவு படுத்துங்கள் என்பது வேண்டாம். இப்போதோ நாம் உயர்ந்தவரிலும் உயர்ந்தவர்கள். பெயர் வழக்கங்கள் எல்லாமே இந்தச் சமயத்தினுடையவை. தில்வாலா கோவில் கூட இச்சமயத்தினுடையதாகும். முழு சிருஷ்டி யின் ஆத்மாக்களினுடைய மனதை எடுத்துக் கொள்பவர் பாபா. தில்வாலா கோயில் அனைவருக்குமானதாகும். ஆத்மா சரீரத்தின் மூலம் அழைக்கின்றது-பாபா, வாருங்கள், வந்து எங்களைப் புதியவராக்குங்கள், நாங்கள் பழையவர்களாக ஆகிவிட்டோம். ஆத்மா, சரீரம் இரண்டுமே பழையவை. ஆத்மா புத்தியற்றதாக, குருடாக ஆகி விட்டது. மனிதர்கள் குருடர் எனச் சொல்லப்படுவதில்லை. கண்களோ இருக்கின்றன இல்லையா? ஆனால் புத்தி குருடாக உள்ளது. ஆத்மாவில் நினைவு செய்வதற்கான புத்தி முற்றிலும் மறந்து போய் விட்டிருக்கிறது. ஆக, கோபியர்கள் எங்கெங்கிருந்தோ அழைக்கின்றனர். பந்தனத்தில் உள்ள கோபியர்கள் சிறு சிறு கிராமங்களில் இருந்து அழைத்துக் கொண்டே இருக்கின்றனர். பாபா சொல்கிறார்-- குழந்தைகளே! சத்யுகத்தில் கிரகஸ்த ஆசிரமம் இருந்தது, தூய்மையாக இருந்தது. இப்போதோ விஷத்துக்காக (விகாரம்) எவ்வளவு தொந்தரவு செய்கின்றனர்! இங்கே நிர்விகாரியாக ஆக்கப்படுவது பற்றி அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. நிர்விகாரி ஆவதன் மூலம் பிறகு என்னவாக ஆவார்கள்? - இதுவும் அவர்களுக்குப் புரியவில்லை. சந்நியாசிகளும் தூய்மை அடைவதற்காக ஓடுகின்றனர். ஆனால் நாம் தூய்மை ஆகி தூய்மையான உலகத்திற்குச் செல்வோம் என்பது அவர்களுக்குத் தெரியாது. இந்த விஷயங்களை அவர்கள் ஏற்றுக் கொள்வதே இல்லை. இச்சமயம் அவ்வளவு துக்கம் உள்ளது- அதனால் இதைவிட முக்தி அல்லது மோட்சம் கிடைத்தால் நல்லது என்று அவர்கள் நினைக்கின்றனர். பாபா சொல்லிப் புரியவைத்திருக்கிறார், மோட்சம் யாருக்குமே கிடைப்பதில்லை. இப்போது நீங்கள் அறிந்து கொண்டிருக்கிறீர்கள். பாபா சொல்கிறார் - இவ்வளவு மட்டும் நினைவு செய்யுங்கள், அதாவது 84 பிறவிகள் முடிந்து விட்டன, இப்போது பாபா

வந்து விட்டார், அழைத்துச் செல்வதற்காக... பாபாவை நினைவு செய்யாதிருந்தால் புயல்கள் அதிகமாக வரும். விவேகமும் சொல்கின்றது- நிரந்தரமாக நினைவு செய்வது மிகவும் கடினம். பாபா சொல்லத்தான் செய்கிறார், நீங்கள் கர்மயோகிகள். ஆனால் பார்க்கப் போனால் கர்மம் செய்யும் போது நினைவு மறந்து போகின்றது. அதுபோன்ற நிலையை அடைவதற்கு நேரம் பிடிக்கின்றது. இதில் அதிக முயற்சி செய்ய வேண்டியுள்ளது. கல்லூரியில் முயற்சியில் ஈடுபட்டுள்ள குழந்தை களுக்கு இரவும் பகலும் படிப்பதே மனதுக்குப் பிடித்த பொழுதுபோக்காக உள்ளது. அரசாங்கத்திடமிருந்து உதவித் தொகை (ஸ்காலர்ஷிப்) பெறவேண்டு மென முயற்சி செய்கின்றனர். மிகவும் கஷ்டப்படுகின்றனர். பிறகு (கிடைத்தவுடன்) மிகுந்த குஷியடைகின்றனர். இங்கும் கூட பாபா சொல்கின்றார்-- நீங்கள் நல்லபடியாகப் படித்து ஸ்காலர்ஷிப் பெறுங்கள். முதன்முதலில் சிம்மா சனத்தில் அமரத் தகுதியுள்ளவர்களாக ஆகுங்கள். பந்தயத்தில் வேகமாக ஓடவேண்டும். நீங்கள் அறிவீர்கள், இப்போது பாபா முன்னிலையில் அமர்ந்துள்ளார். நேரடியாக இந்த ரதத்தில் அமர்ந்து, குழந்தைகளே- குழந்தைகளே என்று உரையாடிக் கொண்டிருக்கிறார். பிரம்மாவின் சரீரமோ தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகும். பாபா சொல்கிறார், நான் ஆத்மாக்களோடு பேசு கின்றேன். நீங்கள் அழைத்திருந்தீர்கள்-- பாபா வாருங்கள். இப்போது நான் வந்திருக்கிறேன். ஆத்மாக்களாகிய நீங்களும் நிராகார். நானும் நிராகார். நீங்கள் பக்திமார்க்கத்தில் வெவ்வேறு பெயர், உருவம், தேச, காலங்களை தாரணை செய்து நினைவு செய்து வந்திருக்கிறீர்கள். இப்போது முன்னிலையில் உங்களோடு பேசிக் கொண்டிருக்கிறேன். உங்களுக்கோ உங்களுடைய சரீரத்தின் ஆதாரம் உள்ளது. நான் இந்த (பிரம்மாவின்) சரீரத்தை கடனாக எடுக்க வேண்டியுள்ளது. தந்தை குழந்தைகளுக்குச் சொல்கிறார்--இப்போது இந்தப் பழைய சரீரத்தை விடவேண்டும். நாடகம் முடிந்தது, இப்போது நிரந்தரமாக பாபாவை நினைப்பதற்கு முயற்சி செய்யுங்கள். வேறு ஏதாவது நினைவுகள் வந்து கொண்டிருந்தால் தண்டனை பெற வேண்டியிருக்கும். முடிந்தவரை மற்றவர்கள் பற்றிய நினைவுகளை நீக்கி விடுங்கள். யாத்திரை செல்வார்களானால் புத்தியில் அதே நினைவு இருக்கின்றது. இதோ, நாம் ஸ்ரீநாத் கோவில் வாசலுக்குச் செல்கின்றோம். உங்களுடையது உண்மையான ஆன்மீக யாத்திரை. ஆத்மா பரமாத்மாவுடன் யோகம் செய்கின்றது. பிறகு சரீர நிர்வாகத்திற்காக இங்கே வந்து போகின்றன. எங்கே இருந்தாலும் நினைவு இருக்க வேண்டும். நீங்கள் அறிவீர்கள், பகவான் சர்வவியாபி அல்ல. அவரோ தந்தையாவார், தந்தை யிடமிருந்து ஆஸ்தி கிடைக்கின்றது. சர்வவியாபி எனச் சொல்வதன் மூலம் எந்த ஓர் அர்த்தமும் வெளிப்படு வதில்லை. தந்தைக்கோ ஆஸ்தி கொடுக்க வேண்டியுள்ளது. எனக்கு ஆஸ்தி கிடைக்க வேண்டும் என்ற ஆசை அவருக்கு இருப்பதில்லை. குழந்தைகளுக்கு ஆஸ்தி தரவேண்டும் என்ற ஆசை அவருக்கு இருக்கும். இந்தத் தந்தைக்கும் கூட எண்ணம் உள்ளது- நாம் ஆஸ்தி கொடுக்க வேண்டும். தந்தை மற்றும் குழந்தைகளின் சம்மந்தம். குழந்தைகள் ஆஸ்தி பெற வேண்டும், தந்தை கொடுக்க வேண்டும். தந்தை பிறகு எதைப் பெற்றுக் கொள்வார்? அவர் கொடுக்க வேண்டியுள்ளது. உண்மையான ஆத்மாவின் மீது சாஹிப் (பிரபு) திருப்தி கொள்வார். ஆகவே எவ்வளவு உண்மையுள்ளவர்களாக ஆகவேண்டும்! ஆனால் அனைவரும் குழந்தை களாகிறீர்கள் இல்லையா? ஆக, ஆஸ்தியைக் கொடுக்கின்ற பாபாவை நினைவு செய்யுங்கள். உங்களுடைய நினைவு யாத்திரையின் ரிஜிஸ்டர் சரியாக இருந்து

கொண்டிருக்குமானால் குஷி இருக்கும். மனிதர்களுக்கு எது பழக்கமாகி விடுகின்றதோ அது நிரந்தரமாக கடைபிடிக்கப்படுகின்றது. புத்தியில் இருக்க வேண்டும்--நமக்கு 84 பிறவிகள் முடிந்து விட்டன. இப்போது நாடகம் முடிந்தது. இப்போது நாம் நமது வீட்டிற்குச் செல்கின்றோம். அதனால் பாபா சொல்கின்றார்-- என்னை நினைவு செய்யுங்கள். கீதையிலும் கூட இரண்டு தடவை மன்மனாபவ என எழுதப்பட்டுள்ளது. சிற்சில விஷயங்கள் மாவில் உப்புப் போல (உண்மையாக) உள்ளன.

மற்ற தர்மத்தினருடைய சித்திரங்கள் முதலியன இருப்பதில்லை. உங்களுடைய சித்திரங்கள் உள்ளன. பிரம்மாவுக்கும் கூட அஜ்மீரில் சித்திரம் உள்ளது. பிராமணர்களிலும் கூட அநேக விதமாக உள்ளனர். வெவ்வேறு பெயர்கள் வைத்திருக்கிறார்கள். மொழிகள் பாருங்கள், எவ்வளவு இருக்கின்றன! குழந்தைகளுக்குத் தெரியும்--நமது இராஜதானியில் ஒரே மொழி இருக்கும். அங்குள்ள மொழியே வேறு. சம்ஸ்கிருதம் முதலியன அங்கே இருக்காது. பெண் குழந்தைகள் அங்குள்ள மொழி முதலியவை பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது குழந்தைகளாகிய உங்களுக்குக் குஷி இருக்க வேண்டும். நாம் இராஜதானி ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறோம். பிறகு அங்கே நமது மொழி இருக்கும். இங்குள்ள மொழிகள் அங்கே இருக்காது. டிராமாவில் விதிக்கப்பட்டபடி பிறகு உங்களுடைய அதே மாளிகைகள் முதலிய வற்றை உருவாக்குவீர்கள். கல்பத்திற்கு முன் போலவே. இங்கே இந்த பிரிட்டிஷ் அரசாங்கம் புது டில்லியை உருவாக்கியது இல்லையா? அங்கோ வைர வைடூரியங்களாலான மாளிகை கட்டுவீர்கள். இதுவோ மோசமான ஓர் உலகம். இதுபோன்றெல்லாம் உங்களுக்குள் பேசிக் கொள்ள வேண்டும். சகோதரி அவர்களே! சகோதரர் அவர்களே! நாமோ போவோம், பிறகு வந்து நமது ராஜதானியைப் பராமரிப்போம். இதுபோல் ஆடை உடுத்துவோம். முன்பெல்லாம் நகை முதலியவை எல்லாம் உண்மையானவற்றை அணிந்திருந்தார்கள். லட்சுமி-நாராயணர் கோயிலில் எவ்வளவு நகைகள் முதலியன இருந்திருக்கும்! சிவனுடைய ஆலயம் என்னவாக இருக்கும்! சிவ லிங்கத்தையும் கூட வைரத்தில் செய்கிறார்கள். இவை கூடப் புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள். நம்முடைய சிவபாபாவின் கோயிலை முஸ்லிம்கள் வந்து கொள்ளையடித்துச் சென்றனர். அது பக்தி மார்க்கத்தின் ஆரம்பத்தில் கட்டப்பட்டது. நீங்கள் அறிவீர்கள், இன்றிலிருந்து 2200 ஆண்டுகளுக்கு முன் சிவபாபா வின் ஆலயம் உருவானது. தாங்களே பூஜைக்குரிய நிலையிலிருந்து பிறகு பூஜாரி ஆகிவிடுகிறார்கள். சோமநாதரின் ஆலயம் உருவானது. சோமரசம் என்று ஞானம் சொல்லப்படுகின்றது. ஞானத்தைக் கொடுப்பவர் பாபா, அவரால் நீங்கள் செல்வந்தர் ஆகிறீர்கள். பிறகு அதே செல்வத்தால் நீங்கள் தந்தைக்குக் கோயில் கட்டுகிறீர்கள். பூஜையும் கூட நடைபெறும் இல்லையா? ஒவ்வொரு வீட்டிலும் கோயில் கட்டுகிறார்கள். நீங்கள் அறிவீர்கள், எப்போது பக்தி மார்க்கம் தொடங்கு கிறதோ அப்போது நாம் பூஜாரி ஆகி மூர்த்திகள் முதலானவற்றை உருவாக்குவோம். குழந்தை கள் நீங்கள் அறிவீர்கள்--நாம் இப்போது நாயகன் பரமாத்மாவுக்கு நாயகி ஆகியிருக்கிறோம், அவரிடமிருந்து ஆஸ்தியைப் பெறுவதற்காக. அவர்கள் விகாரத்திற்காக நாயகி ஆகிறார்கள். இங்கே பிறகு ஆத்மாக்கள், பரமாத்மாவாகிய நாயகனுக்கு நாயகி ஆகிறார்கள். பார்க்கிறீர்கள்--பக்தர்கள் அனைவரும் அவரை நினைவு செய்கின்றனர். அந்த நாயகனின் மகிமை மிகப் பெரியது. தூய்மை இழந்துவிட்ட நாயகிகளைப்

தூய்மையாக ஆக்குகின்றார். ஆத்மா தான் தூய்மை இழக்கின்றது, ஆத்மா தான் தூய்மை அடைகின்றது. நல்லது.

இனிமையிலும் இனிமையான, வெகுகாலம் கழித்து, காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய், தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. உதவித் தொகை (ஸ்காலர்ஷிப்) பெறுவதற்காக நன்றாகப் படிக்க வேண்டும். சிம்மாசனத்தில்அமர்வதற்குத் தகுதியுள்ளவராக ஆவதற்குப் பந்தயத்தில் ஓடிச் செல்ல வேண்டும். கர்மம் செய்யும்போது நினைவில் இருக்க வேண்டும்.

2. நாம் ஆன்மீக யாத்திரையில் உள்ளோம். அதனால் மற்ற அனைவருடைய நினைவை புத்தியிலிருந்து நீக்கி பாபாவின் நினைவில் நிரந்தரமாக இருக்க வேண்டும். நினைவினுடைய பதிவு ஏட்டை (ரிஜிஸ்டரை) சரியாக வைத்திருக்க வேண்டும்.

வரதானம்: நிரந்தர யோகியாக மற்றும் பவித்திரமாக ஆகி அனைத்து விகாரங்களுக்கும் விடைகொடுக்கக் கூடிய சக்தி சொரூபம், பூஜ்ய சொரூபம் ஆகுக.

தந்தை மூலம் அனைத்து குழந்தைகளுக்கும் முக்கியமான இரண்டு வரதானங்கள் கிடைக் கின்றன - ஒன்று சதா யோகி ஆகுக, இரண்டாவது பவித்திரம் ஆகுக. யார் இந்த வரதானத்தை வாழ்வில் சதா அனுபவம் செய்கின்றார்களோ, அவர்கள் இரண்டு, நான்கு மணி நேர யோகி ஆகமாட்டார்கள், ஆனால், நிரந்தர யோகியாக இருப்பார்கள். சில நேரங்களில் மட்டும் தூய்மையானவராக இல்லாமல் சதா தூய்மையானவராக மற்றும் அனைத்து விகாரங்களுக்கும் விடைகொடுப்பவராக இருப்பார்கள். அவ்வப்போது கோபம் அல்லது மோகம் வந்துவிட்டது என்று சொல்லமாட்டார்கள். எந்தவொரு விகாரமும் நினைவு சொரூபம் ஆகவிடாது. அப்பேபட்ட யோகி தான் சக்தி சொரூபம் ஆவார்கள் மற்றும் சதா பவித்திரமாக இருக்கக்கூடிய பூஜ்ய சொரூபம் ஆவார்கள்.

சுலோகன்: சதா ஞான சூரியனுக்கு முன்னால் இருங்கள், அப்பொழுது பாக்கியம் என்ற நிழல் உங்கள் கூடவே இருக்கும்.